**MCOP NO: 960/2025** **DATE: 09.03.2026**

ம.சா :1

பெயர் : திரு.வின்செண்ட்

த/பெ : திரு.சஞ்சீவி

வயது : 48

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து காலை 09.20 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த நேரமானது அலுவலக நேரம் என்பதால் போக்குவரத்து நெரிசல் அதிகம் இருக்கும் என்று சொன்னால் அன்றை தினம் போக்குவரத்து நெரிசல் அவ்வளவு கிடையாது. நான் பயணம் செய்த வாகனத்தை ஓட்டிய நபர் வேறுறொருவர். நான் பின்னால் அமர்ந்து சென்றேன். இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆம்புலன்ஸிற்கு யார் தகவல் தெரிவித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்து 21.12.2025 என்று சொன்னால் சரிதான். மசாஆ 4 2 பக்கம் உள்ள ஆவணங்களில் 2 வது பக்கம் இணைக்ககப்படவில்லை என்பதால் அந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மசாஆ 4 ல் விபத்து ஏற்பட்ட தேதி 21.12.2025 என்று காட்டப்பட்டுள்ளது. மசாஆ 4 ல் நான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது என் காயங்கள் குணமடைந்து விட்டது என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் காட்டப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டை தவிர என்னுடைய காயங்களை நிரூபிப்பதற்காக வேறு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய விடுவிப்பு சான்றை தாக்கல் செய்துள்ளேன்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 09.03.2026 ல் அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.